## இந்தியாவின் இறையாண்மையை அமெரிக்காவிடம் அடகு வைத்த மோடி அரசு!

# பெகல்காம் தாக்குதலுக்கு ஒன்றிய அரசின் உளவுத்துறை குறைபாடே காரணம்!

## நாடாளுமன்ற மக்களவையில் – ‘சிந்தூர்’ ராணுவ நடவடிக்கை குறித்த சிறப்பு விவாதத்தில் –

## கழக துணைப் பொதுச் செயலாளர் – கழகக் கொறடா ஆ.இராசா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 4-

**நாடாளுமன்ற மக்களவையில், ‘சிந்தூர்’ ராணுவ நடவடிக்கை குறித்து நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய கழக துணைப் பொதுச் செயலாளரும் - மக்களவை கழகக் கொறடாவுமான ஆ.இராசா, “இந்தியாவின் இறையாண்மையை” அமெரிக்காவிடம் அடகு வைத்து விட்டது மோடி அரசு” என்றும், “பெகல்காம் தாக்குதலுக்கு ஒன்றிய அரசின் உளவுத்துறை குறைபாடே காரணம்” என்றும் குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் ‘சிந்தூர்’ ராணுவ நடவடிக்கை குறித்து 29.07.2025 அன்று நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினரும் கொறடாவுமான ஆ.இராசா அவர்கள் பங்கெடுத்து ஆற்றிய உரை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அவையில் எனக்கு முன்பாக உரையாற்றிய தி.மு.கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் கருத்துக்களை ஒட்டி மேலும் சில கருத்துக்களை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். அந்த கருத்துக்கள் அடிப்படையில் அரசுக்கு சில கேள்விகளையும் எழுப்ப விழைகிறேன்.

மாநிலக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் பெகல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் குறித்தும் அதை ஒட்டி நடத்தப்பட்ட **‘ஆப்ரேசன் சிந்தூர்’** ராணுவ நடவடிக்கை குறித்தும் தங்கள் அய்யங்களை எழுப்பியுள்ளனர். நாங்கள் அப்படிப்பட்ட அய்யங்களை எழுப்பும்போது எங்களை ‘தேச விரோதிகள்’ என முத்திரை குத்தக் கூடாது என்று நான் முதலிலேயே கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்....)

### போர் நிதி வழங்கியதில் எங்கள் தலைவர் கலைஞர்தான் முன்னோடி!

எனக்கு இந்தி தெரியாது; ஆனாலும் நான் இந்தியன். இதை நீங்கள் ஏற்காவிட்டால், நான் வெளியேறத் தயார்.

தேசிய ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ள ஒரு மாநிலக்கட்சிதான் தி.மு.க.. நாங்கள் தனி நாடு கேட்ட காலம் இருந்தது. அதை நாங்கள் மறுக்கவில்லை. 1962 ஆம் ஆண்டு இந்தியாவின் மீது சீனா ஆக்கிரமிப்பு நடந்தபோது எங்களின் தனி நாடு கோரிக்கையை நாட்டு நலன் கருதி விட்டுவிட்டோம். 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தான்- இந்தியா போர் ஏற்பட்டபோது, மாநில அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு போர் நிதியாக வழங்கி தேசிய உணர்வை வெளிப்படுத்தியவர் எங்கள் தலைவர், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அவ்வளவு பெரிய தொகையை எந்த மாநிலமும் அன்றைக்குத் தரவில்லை.

### மாபெரும் பேரணி நடத்தி - இராணுவத்திற்குப் பேராதரவு நல்கியவர் எங்கள் முதல்வர்!

1999 ஆம் ஆண்டு கார்கில் போர் நம் தேசத்தின் மீது திணிக்கப்பட்டபோது தமிழகத்தின் சார்பில் 100 கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு வழங்கியவரும் அவரே. வேறு எந்த மாநிலமும் அவ்வளவு பெரிய தொகையை அப்போதும் வழங்கவில்லை. இப்போதும், இந்திய ராணுவத்திற்கு ஆதரவாக லட்சக்கணக்கான மக்களைத் திரட்டி இந்தியாவிலேயே முதன் முதலாக பேரணியை நடத்தியதும் எங்கள் முதல்வர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான்.

### சூழலுக்கேற்ப முடிவெடுத்த பேராளுமைகள்!

இந்த வரலாற்றுப் பின்னணி கொண்ட இயக்கத்தின் சார்பில் சில கேள்விகளை நான் இந்த நாடாளுமன்றத்தில் முன்வைக்க விரும்புகிறேன். இந்த அவையில் பாதுகாப்புத்துறை அமைச்சர், உள்துறை அமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரின் உரைகளை நான் கவனத்துடன் கேட்டேன். கெடுவாய்ப்பாக, அவர்களின் உரைகளில் வெறும் ‘சப்தம்’ இருந்ததே தவிர சத்தான வாதங்கள் இல்லை. எந்த விவாதமாக இருந்தாலும் அவைகளில் நேருவையும், இந்திரா காந்தியையும், ராஜீவ் காந்தியையும், காங்கிரஸ் கட்சியையும் தாக்குவது ஆளும் பா.ஜ.க.வின் வழக்கமான கலாச்சாரமாகி விட்டது. ஒப்பீடுகள் எப்போதும் சரியானதாக இருக்க முடியாது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அது நேர்ந்த காலத்தில் எழுந்த சூழ்நிலைகள், காலப் பின்புலம் இவற்றை வைத்துதான் அப்போது இருந்த தலைவர்களும், பிரதமர்களும் முடிவெடுத்திருப்பார்கள். அப்படிப்பட்ட முடிவுகளை அந்தச் சூழலுக்கு ஏற்பத்தான் ஆராய்ந்து அந்தத் தலைவர்களின் ஆளுமைகளை எடைபோட வேண்டும்.

### தோல்வியை நேர்மையாக ஒப்புக்கொண்டவர் நேரு!

உள்துறை அமைச்சர் சீனப் போரை பற்றிக் குறிப்பிட்டார்; 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற சீனப் போரில் இந்தியாவுக்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அதை நேரு மறைத்தாரா? அந்தப் போரின் தோல்விக்கான காரணத்தை விளக்கினார். ஒவ்வொரு மாதமும் தான் பதவியில் இருந்த காலத்தில் மாநில முதல்வர்களுக்கும், மக்களுக்கும் கடிதம் எழுதிய பிரதமர், நேரு மட்டும்தான். போர் நடந்தபோது களத்தில் இருந்த பருவ காலம் (climate) , நமது ராணுவம் பயணிக்க வேண்டியிருந்த நிலப்பரப்பு (Terrain) . சீனாவின் ராணுவங்களுக்கு ஈடுகொடுக்க இயலாத ஆயுதங்கள், அன்றைய உலக அரங்கில் சீனாவும், ரஷ்யாவும் எடுத்த நிலைப்பாடுகள் - இவைகள் எல்லாம் தோல்விக்கான காரணம் என்பதை கடிதங்கள் வாயிலாக நேர்மையாக ஒப்புக் கொண்டவர் நேரு. அப்போது தலைமை ராணுவத் தளபதி தனது பதவியை ராஜினாமா செய்தார்; இது கடந்த கால வரலாறு. நிகழ்காலத்துக்கு வாருங்கள்.

### மாக்சிய வல்லியின் தத்துவம்தான் உங்கள் தத்துவம்!

பெகல்காமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தினீர்கள். மனசாட்சியுடன் நீங்கள் வெளிப்படையாக அது குறித்து விவாதித்தீர்களா? பிரதமர், அமைச்சர்கள் தொடங்கி உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை யாராவது பெகல்காம் சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்தீர்களா? அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட நான்கு பேரை சுட்டு வீழ்த்தி விட்டதாகப் பெருமை பேசுகிறீர்கள். இதிலே பெருமைப்பட என்ன இருக்கிறது?.

16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ‘மாக்சிய வல்லி’யின் தத்துவம்தான் உங்களின் தத்துவம். **பின்பற்றுகிற வழியைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. வெற்றிதான் முக்கியம்**’’ **(Ends justify the means)** என்ற அந்தத் தத்துவம் தான் உங்களின் தத்துவம். “பெகல்காமில் என்ன நடந்ததோ அதை விட்டு விடுங்கள். நாங்கள்தான் தாக்குதல் நடத்தியவர்களை கொன்று விட்டோமே? இதுவே வெற்றி!” என்று கொண்டாடுகிறீர்கள். இது நியாயமா?

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை”**

- என்பதுதான் எங்கள் தத்துவம். **“பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்தினாலும், சான்றோர் பழிக்கும் செயல்களை செய்யாதே**’’ என்பது எங்கள் நெறி! தயவு செய்து சொல்லுங்கள், உங்கள் வழி சரியானதா?

### உளவுத்துறை எச்சரித்திருந்தும் தவறவிட்டு விட்டீர்களே!

பெகல்காம் பகுதியை விண்வெளிக் கலன் மூலம் அதிநுட்பமான ஒளிப்படக் கருவிகளைக் கொண்டு தொடர்ந்து ஆராய வேண்டும் என்று உங்கள் உளவுத்துறையும் (IB), பகுப்பாய்வு நிறுவனமும் (RAW) அரசுக்கு இரண்டு ஆண்டுகளுக்குமுன்பே ஒரு‘உள்சுற்றறிக்கையை’ அனுப்பியிருக்கிறது. இதை பிரதமரோ, உள்துறை அமைச்சரோ மறுக்க முடியுமா? இந்த அறிக்கைக்குப் பின்பும் அங்கே ராணுவமும் இல்லை; காவல் துறையும் இல்லை. காஷ்மீருக்கான சிறப்புப் பிரிவு 370 ஐ ரத்து செய்த பின்பு அங்கு துப்பாக்கி சத்தமே இல்லை என்று மார்தட்டிக் கொண்டீர்கள். அது இன்று ராணுவத் தாக்குதல் நடவடிக்கையில் போய் முடிந்திருக்கிறது. ஆனால், நேருவைக் குறை சொல்லுகிறீர்கள். எது தவறு என்பதை நீங்களே முடிவு செய்ய முடியாது!.

### வாஜ்பாயின் இராஜதந்திர முடிவு!

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 24ல் என்ன நடந்தது. கிருஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு முந்தைய நாள்! காட்மாண்டுக்குப் புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் காந்தகாருக்குக் கடத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையால் - இந்தியாவால் தீவிரவாதி என்று சிறைபிடிக்கப்பட்ட மவுலானா மசூத் அசார் டெல்லி திகார் சிறையிலே இருக்கிறார். அவரை விடுவிப்பதற்காக 184 பயணிகளுடன் சென்ற அந்த விமானத்தை பயங்கரவாதிகள் கடத்தினார்கள். பேரம் பேசப்பட்டது. அப்போது யார் பிரதமர்? அடல் பிகாரி வாஜ்பாய். உலக நாடுகளுடன் கொண்டுள்ள வெளியுறவுக் கொள்கைகளைப் பரிசீலித்து, அன்றைக்கு எதிர்க் கட்சியாக இருந்த காங்கிரசுடன் கலந்துபேசி, பயணிகள் உயிரைக் காப்பாற்ற பேரம் படிந்தது. இன்றைக்கு இந்திய தேசத்தின் பாதுகாப்பு ஆலோசகராக இருக்கிற அஜித் தோவல், ‘இந்தியாவின் இராஜதந்திரம் தோற்றுவிட்டது’ என்று அப்போது சொன்னார். என்றாலும், தீர்க்கமாக முடிவெடுத்து மவுலானா மசூத் அசார் விடுவிக்கப்பட்டடார். விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல, வெளியுறவுத்துறை அமைச்சர் அவரை உபசரித்து தனி விமானத்தில் கராச்சியில் கொண்டு போய் விட்டார். இதிலே வெட்கப்பட ஒன்றுமில்லை. அது அப்போது தேவையான அரசியல் முடிவு.



### முறைகேடுகளில் கைதேர்ந்த ஒன்றிய அரசு!

இன்று நம் முன்னால் இருக்கிற பிரச்சினைகள் இரண்டு. நேற்றைய தினம் ராணுவ அமைச்சர் இந்த அவையில் பேசினார். குழந்தைத்தனமான பேச்சு. இப்படி அவர் பேசியதற்காக வருந்துகிறேன். “இந்திய விமானங்கள் வீழ்த்தப்பட்டனவா?” என்று கேட்டதற்கு, அவர் என்ன பதில் சொன்னார்? “பரீட்சை எழுதும்போது தேர்ச்சி பெற்றோமா என்று தான் பார்க்க வேண்டுமே தவிர, பேனா உடைந்ததா? பென்சில் உடைந்ததா? என்று பார்க்கக் கூடாது” என்றார். அவருக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். பேனா, பென்சில் முக்கியமல்ல, உண்மைதான்!; ஆனால், நாங்கள் கவலைப்படுவது தேர்வில் முறைகேடு ஏதும் நடந்து விடக் கூடாது என்றுதான். முறைகேடு செய்வதில் நீங்கள் கைதேர்ந்தவர்கள். வழியைப் பற்றி கவலைப்பட மாட்டீர்கள். தவறு செய்தாவது வெற்றியைப் பிடித்துவிட வேண்டும் என்று துடிப்பவர்கள்.

> ### ஜனநாயகப் பாதைக்குத் திரும்புங்கள்!
>
> **அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் வாயிலாக, அரசியல் மன மாச்சரியங்களை மறந்து அனைவரையும் எங்கள் தி.மு.கழகத்தின் சார்பில் அழைக்கிறேன். ஜனநாயக மரபுகளை புறந்தள்ளும் இந்த அரசைக் கட்டாயப்படுத்தியாவது ஜனநாயக நடைமுறைகளுக்கு உட்படுத்தி திறந்த மனதோடு இந்த அவையில் விவாதித்து மக்களின் நம்பிக்கையை பெற உதவுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

### உலக நாடுகள் எதுவும் பாகிஸ்தானைக் கண்டிக்கவில்லை!

எனக்குப் புரியாத இன்னொன்று, பெகல்காமில் நடந்த தீவிரவாதிகளின் தாக்குதல் வருத்தமளிக்கிறது என்று வெளிப்படையாக தேசத்திடம் ஒப்புக் கொள்வதில் உங்களுக்கு என்ன பிரச்சினை? உள்துறை அமைச்சர் இங்கே பெருமிதம் கொள்கிறார். இரண்டு மூன்று நாடுகளைத் தவிர மற்ற எல்லா நாடுகளும் பாகிஸ்தானின் பயங்கரவாதத்தைக் கண்டித்ததாக; உண்மை நிலையென்ன? எந்த நாடாக இருந்தாலும், நாடுகளின் கூட்டமைப்பாக இருந்தாலும், G20, G7, BRICS, QUAD - அமைப்புகள் அனைத்தும் தீர்மானங்கள் இயற்றியது உண்மைதான். பாகிஸ்தானை எதிர்த்து அல்ல; பெகல்காமில் நடந்த தாக்குதலைக் கண்டித்து. அவர்கள் பாகிஸ்தானைக் கண்டிக்கவே இல்லை. ஆனால், நீங்கள் தம்பட்டம் அடித்துக் கொள்கிறீர்கள், உலக நாடுகள் உங்களோடு என்று!.

இன்னொரு நகைச் சுவை. நாங்கள் “அமெரிக்க அதிபர் டிரம்ப்தான் போர் நிறுத்தத்தை அறிவித்தார்” என்கிறோம். நீங்கள் அதை மறுக்கிறீர்கள். நான் இந்த நாடாளுமன்றத்தில் ஒரு இந்தியனாக வெட்கப்படுகிறேன்; ஏன்? நேற்று இந்த அவையில் வெளியுறவுத்துறை அமைச்சர் என்ன சொன்னார்?

### அமெரிக்கா எச்சரிக்கும் வரை நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்களா?

அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் நம்முடைய பிரதமர் மோடியைத் தொடர்பு கொண்டு, “இன்னும் சில மணி நேரத்தில் பாகிஸ்தான் இந்தியாவின் மீது தாக்குதல் நடத்தக் கூடும்” என்று! அமெரிக்கா சொல்லித் தெரிகிற வரை நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்களா? உங்களின் உளவுத்துறை எங்கே போனது? ராணுவ ரகசியப் பிரிவு ‘ரா’ எங்கே போனது?

**அவைத் தலைவர்:** உறுப்பினருக்குச் சொல்கிறேன். வெளியுறவுத் துறை அமைச்சர் பேசும்போது நான் இருந்தேன். கடந்த ஏப்ரல் 22 ஆம் தேதி தாக்குதல் நடந்த பின்புதான் பிரதமரோடு அமெரிக்க துணை அதிபர் பேசியதாகச் சொன்னார்.

(குறுக்கீடுகள்....)

**அவைத் தலைவர்:** அவர் என்னதான் சொன்னார்?

**ஆ.இராசா:** மன்னிக்கவும். இந்த அவையில் நேற்றைய தினம் வெளியுறவுத்துறை அமைச்சர் பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து அப்படியே தருகிறேன். (குறுக்கீடுகள்...)

உறுப்பினர் அனுராக் தாக்கூர் அவர்களே! உங்கள் அமைச்சர் அளித்த பதிலை நான் மேற்கோள் காட்டுகிறேன். அவ்வளவுதான்! அவர் சொன்னது இதுதான்.

**அவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது தவறான தகவல்களைத் தந்தால், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

**ஆ.இராசா:** நான் அலுவலகப் பதிவேட்டில் இருந்துதான் மேற்கோள் காட்டுகிறேன்.

**அவைத் தலைவர்:** அப்படியானால் நீங்கள் தொடருங்கள்.

### நாட்டை ஆளும் வல்லமையை இழந்துவிட்டீர்கள்!

**ஆ.இராசா:** வெளியுறவுத்துறை அமைச்சரின் பேச்சு இதுதான். அவைத்தலைவர் அவர்களே “**மே மாதம் 9 ஆம் தேதி அமெரிக்காவின் துணை அதிபர் திரு. ஜே.டி. வான்ஸ் அவர்கள் நம்முடைய பிரதமரை அழைத்து அடுத்த சில மணிகளில் இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்த இருக்கிறது என்று எச்சரித்தார். அப்படி ஒரு தாக்குதல் நடந்தால் உரிய முறையில் நாங்கள் பதில் தாக்குதல் தருவோம் என்று அந்த எச்சரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் பேசினார்**’’ என்று! நான் கேட்கிறேன். அமெரிக்கா உங்களை எச்சரிக்கிற வரை உங்கள் உளவுத்துறை எங்கே போனது? என்ன செய்து கொண்டிருந்தது?.

பன்னாட்டு மேலாண்மை நிதியம் (International Monetary Fund) பாகிஸ்தான் பெற்ற கடன்களுக்குத் தீர்வாக பெரும் பண உதவி அளிக்கிறது. அதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது அமெரிக்கா. அதனை ஏன் தடுக்கவில்லை ?. (குறுக்கீடுகள்....) இவைகளெல்லாம் பெரும் குறைகளாக உள்ளன. பிரச்சினையை இரண்டாகப் பிரித்துக் கொள்வோம். ஒன்று பெகல்காமில் நடந்த தாக்குதல்; அடுத்து அப்பட்டமான உளவுத்துறையின் தோல்வி. அதனை நீங்கள் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். உங்கள் நிர்வாகக் குறைபாட்டுக்கு இதுவே எடுத்துக் காட்டு. நீங்கள் நாட்டை ஆளும் வல்லமையை இழந்து விட்டீர்கள் என நான் குற்றம்சாட்டுகிறேன். (குறுக்கீடுகள்....) மக்கள் உங்களோடு இப்போது இல்லை.

### கார்கில் போர்: மிகுந்த புத்திக் கூர்மையோடு எதிர்கொண்டார் வாஜ்பாய்!

பெகல்காம் தாக்குதலுக்குப்பின் மற்ற நாடுகளுடனான உங்களின் உறவுகள் எப்படி இருக்கிறது. உலகமெங்கும் தூதுக் குழுவை அனுப்பினீர்கள். என்ன ஆயிற்று? நீங்கள் நேருவின் கொள்கைகளை ஏற்க மாட்டீர்கள்; அந்தக் கொள்கையை ஏற்கும் தகுதிப்பாடு உங்களுக்கு இல்லை; பரவாயில்லை போகட்டும்! உங்கள் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாயின் பாதையிலாவது பயணிக்கக் கூடாதா? கார்கில் போரில் என்ன நடந்தது? மிகுந்த புத்திக் கூர்மையோடு அனைவரையும் மதித்து ஆலோசித்து அந்தப் போரை வாஜ்பாய் எதிர்கொண்டார். போருக்குப் பிறகு அதுகுறித்து அறிக்கை அளிக்க ஒரு ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையம் நாடாளுமன்றத்திற்கு அறிக்கை அளித்தது. அந்த அறிக்கையின் மீது அவையில் விவாதம் நடந்தது!. அந்தப் போரில்

“என்னென்ன செய்தோம்; என்னென்ன செய்யத் தவறினோம்” என்று வெளிப்படையாக விவாதங்கள் நடந்தது. உங்கள் அரசியல் முன்னோடி அவர்தான்! நீங்கள் வாஜ்பாயின் நிர்வாக வாரிசாக உங்களை பிரதிபலிக்க விரும்பு கிறீர்கள்; ஆனால், அவர் காட்டிய வெளிப்படைத் தன்மையைக் காட்டினீர்களா?

### 100 கோடி மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் அவை இது!

இந்த அவைக்கு எதையும் வெளிப்படையாகச் சொல்லாமல் மறைக்கிறீர்களே? நூறு கோடி மக்களுக்கு அதிகமானவர்களின் அரசியல் எண்ணவோட்டத்தைப் பிரதிபலிக்கும் இடம் இந்த அவைதான்! நீங்கள் இதை உதாசீனப்படுத்துகிறீர்கள். நீங்கள் ஜனநாயகவாதிகளா? உங்களின் இந்தப் போக்கை நாங்கள் விமர்சிக்கக் கூடாதா?.

நான்அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் உங்களின் நிர்வாகத் திறன் இவ்வளவுதான்!. சிந்தூர் ராணுவ நடவடிக்கை (Sindoor Operation) முழுமை பெறாத ராணுவ நடவடிக்கை!. அதிபர் டிரம்ப் அவர்களால் முடித்து வைக்கப்பட்ட போர் நிறுத்தம்!. இன்னமும் நான் குழம்பிப் போகிறேன். உங்களிடம் ஒன்றைக் காட்ட விரும்புகிறேன். இன்று இதோ இரண்டு முக்கிய செய்தித்தாள்கள். ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ் என்ன சொல்கிறது தலைப்புச் செய்தியாக? நோக்கம் நிறைவேறி விட்டது; இனி போர் இல்லை!” என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் சொன்னதாக!. இன்னொரு செய்தித்தாள் என்ன சொல்கிறது? சிந்தூர் ராணுவ நடவடிக்கை இன்னும் முடிவுபெறவில்லை; இது ஒரு இடைவெளி தான் (Pause)” என்று!. ஒரு அமைச்சர், “போர் முடிந்தது” என்கிறார். இன்னொரு அமைச்சர் “இன்னும் தொடரும்” என்கிறார். இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும் இல்லை! என்ன விளைவு? என்னுடைய கடைசி கருத்துக்கு வருகிறேன்.

உலக நாடுகள் உங்களோடு ஆதரவாக இருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆனால், பாகிஸ்தான் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலில் உள்ள, பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் குழுவில் உறுப்பினராகத் தேர்வு பெறுகிறது. நீங்கள் பாகிஸ்தானை “பயங்கரவாத நாடு” என்கிறீர்கள்; அப்படியானால் பாகிஸ்தானின் முயற்சியை ஏன் தடுத்து நிறுத்தவில்லை? (குறுக்கீடுகள்.....கூச்சல்கள்....)

### இந்த அவையில் ஜனநாயக முறையில் விவாதித்து - மக்களின் நம்பிக்கையைப் பெறுங்கள்!

அவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் வாயிலாக, அரசியல் மன மாச்சரியங்களை மறந்து அனைவரையும் எங்கள் தி.மு.கழகத்தின் சார்பில் அழைக்கிறேன். ஜனநாயக மரபுகளை புறந்தள்ளும் இந்த அரசைக் கட்டாயப் படுத்தியாவது ஜனநாயக நடைமுறைகளுக்கு உட்படுத்தி திறந்த மனதோடு இந்த அவையில் விவாதித்து மக்களின் நம்பிக்கையை பெற உதவுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி!

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. உரையாற்றினார்.